**கவனிக்க .-** 2015.05.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இம்முறை வெளியாகும் வர்த்தமானப் பத்திரிகை பகுதி V இல் 2012 ஆம் ஆண்டு யூன் முதல் செத்தெம்பர் வரையான காலாண்டிற்கான அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் வெளியிடப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1917 - 2015 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2015.05.29

*1917 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 848 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 848 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் துறை அமைச்சு

*1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பந்தியின் கீழான அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தைக் கொண்ட தென் மாகாண சபை (பின்விளை ஏற்பாடுகள்) சட்டத்தின் (1) "அ" பந்தியில் பொருள் கோடல்களின் படி தென் மாகாண கல்வி காணி மற்றும் காணி அபிவிருத்தி விடயப் பொறுப்பாளர் கௌரவ சந்திம ராசபுத்ர அமைச்சர் அவர்களால் (1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 1995 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க மற்றும் 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கம் ஆகியவற்றைக் கொண்ட காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 6 (1) பந்தியின் கீழ் இங்கு கீழுள்ள அட்டவணையில் விபரித்துக் காட்டப்பட்டுள்ள அலுவலர்கள் அவர்களுடைய கடமைகளுக்கு மேலதிகமாக 2012.01.01 ஆந் திகதி முதல் செயற்படும் விதத்தில் காணி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.*

வை. விக்ரமசிறி,
செயலாளர்,
தென் மாகாண கல்வி, காணி மற்றும்
காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும்
தகவல் துறை அமைச்சு.

*2015, ஏப்பிறல் 9 ஆந் திகதி.*

**அட்டவணை**

| தொடர் இல. | அலுவலரின் பெயர் | நியமித்த அலுவலகம் | நியமிக்கப்பட்ட மாகாணம் |
|---|---|---|---|
| 1 | கோரகே சிலானி ருக்மாலி | உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம், காலி | தென்மாகாணம் |
| 2 | மாபொட்டுவன ஜாகொடகே தொன்கோஷல சமிந்த, கித்சிறி | பிரதேச செயலகம், நான்கு கடவைகள், காலி. | தென் மாகாணம் |

5-650

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பயிலுநர் மருந்துக் கலவையாளர் பதவி (பயிற்றுவிக்கும் தரத்துக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2015

வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பயிலுநர் மருந்துக் கலவையாளர் பதவிக்கு (பயிற்றுவிக்கும் தரத்துக்கு) ஆட்சேர்ப்பதற்காக பின்வரும் தகைமைகள் கொண்ட வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுள்ள இலங்கை ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம், குருநாகல் நகரத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையமொன்றில் நடாத்தப்படும் என்பது தெரியப்படுத்தப்படுகிறது. பரீட்சை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்கு உரிமை உண்டு.

2. **சம்பளத்திட்டம்.**- அரசாங்க பரிபாலன சுற்றுநிருபத்துக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பளப் பரிமாணம் 6/2006 (iv) இன்படி MT 2/2006 A - ரூபா 14,570-10×170-11×180-6 × 240 - 14 × 320 - ரூபா 24,170 ஆகும்.

***3. கல்வித் தகைமைகள்.*** *- சிங்கள/தமிழ்/ஆங்கிலம், கணிதம்/எண்கணிதம், விஞ்ஞானம்/சுகாதார விஞ்ஞானம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுட்பட 4 திறமைச் சித்திகளுடன். ஒரே அமர்வில் 6 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்து இருக்க வேண்டும்.*

*கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயிரியல் மற்றும் இரசாயனவியல் உட்பட விஞ்ஞான பாடங்கள் மூன்றிலும் (3), பழைய பாடத்திட்டத்திட்டத்தின் கீழ் எனின் தாவரவியல் மற்றும் இரசாயணவியல் உட்பட விஞ்ஞான பாடங்கள் மூன்றிலும் (3) ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*மேற்படி கல்வித் தகைமைகள் 2015.06.30 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் :*

(ஆ) ***வேறு தகைமைகள்.-***

(i) ***வயதெல்லை.*** *- வயது 18 இற்குக் குறையாமலும் மற்றும் 30 இற்குக் கூடாமலும் இருக்க வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண சபை அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் இருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை பொருத்தமாகாது.)*

(ii) *இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.*

(iii) *விண்ணப்பம் கோரும் தினத்தன்று வடமேல் மாகாண சபை பிரதேச எல்லைக்குள் 3 வருடங்களுக்குக் குறையாத காலம் நிரந்தர வதிவாளராக இருக்க வேண்டும். (நிரந்தர வதிவிடம் உரிய பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கிராம அலுவலரின் மூலம் வழங்கப்படுகின்ற வதிவிட சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)*

(iv) *சிறந்த ஒழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.*

(v) *எழுத்துத் திறமை*
*மருந்துக் கலவையாளர் பதவியில் சேர்வதற்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தேசிய வைத்திய வித்தியாலயத்தில் இரண்டு வருட கால மருந்துக் கலவையாளர் பயிற்சி பாடநெறியை பெற்றுக்கொள்வதுடன் சான்றிதழ் பெற்று மருந்து கலவையாளராக ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.*

*மேற்படி கல்வித்தகைமை பெற்றுக்கொண்ட பின்பு திறந்த போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், அதிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் பயிலுநர் மருந்துக் கலவையாளர் பதவிக்கு (பயிற்றுவிக்கும் தரத்துக்கு) சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுவோர், தேசிய வைத்திய வித்தியாலத்தில் இரண்டு வருட மருந்து கலவையாளர் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு தொடர்புபடுத்தப்படுவர். இந்த பாடநெறியை மேற்கொள்ளும் கால எல்லைக்குள் அவர்களுக்கு 12,360 ரூபா மாத கொடுப்பனவாக வழங்கப்படும்.*

(vi) *மேற்கூறப்படும் மருந்து கலவையாளர் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து பொருத்தமான தொழிற் தகைமை பெற்றுள்ள பயிலுநர் மருந்துக் கலவையாளர் தொழிற் தகைமையை நிறைவு செய்துகொண்ட தினம் தொடக்கம் செல்லுபடியாகும் படி* MT 2006 A *சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பளப் படிமுறை உருவாக்கப்படும்.*

***4. சேவை நிபந்தனைகள்.-***

(i) *இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். விதவை/தபுதாரன், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.*

(ii) *இப்பதவியை பெற்றுக்கொள்பவர்கள் மூன்று (3) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதோடு அவர் அக்காலத்துக்குள் தமது கடமையும் நடத்தையும் திருப்திகரமான முறையில் நடாத்திக் கொண்டு சென்றிருத்தல் முதலாவது தடை தாண்டிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் அவசியமானவைகள் பூரணப்படுத்தி இருந்தால் இக்கால இறுதியில் சேவை நிரந்தரமாக்கப்படும்.*

(iii) *தாபன விதிக் கோவை* I *ஆவது தொகுதியின்* II *ஆவது பந்தியின் 10 முதல் 12 வரையிலான பந்திகளிலுள்ள விதிகள், பதவிக்கு பொருத்தமானதாக அமையும்.*

(iv) *இந்த பதவிக்கான ஆட்சேர்ப்பு/பதவியுயர்வுக்குரிய நிபந்தனைகளுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி நிபந்தனைகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும் மாகாண நிதி நிபந்தனைக் கோவை, மாகாண ஒழுக்காற்று கோவை அரச மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் அறிவிக்கப்படும். மற்றும், அவ்வப்போது வழங்கப்படுகின்ற வேறு நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமாக செயலாற்றுவதற்கு சகல அலுவலர்களும் கடமைப்பட்டுள்ளனர்.*

***5. ஆட்சேர்க்கும் முறை.*** *- வெற்றிட எண்ணிக்கையை விட குறைந்த எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு இருப்பின், தகைமைகள் பரீட்சிக்கப்படும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர். வெற்றிட எண்ணிக்கைக்குக் கூடுதலான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருப்பின் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்தல் நடைபெறும். பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 70% இந்தப் பரீட்சை பெறுபேற்றின் மூலம் நிரப்பப்படும்.*

பரீட்சை பாடத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்கும் 40% அல்லத அதற்கு அடிப்படையில் மேற்பட்ட புள்ளிகள் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய புள்ளிகள் முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். அந்த பதிவேட்டின் தொடர்ச்சிக்கு ஏற்றாற்போல வெற்றிட எண்ணிக்கைக்கு உரிய முறையில், தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு வரவழைக்கப்படுவர். (நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

*6. **பரீட்சை முறை.-***

| பாடங்கள் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| பொது அறிவு | 2 மணித்தியாலம் | 100 |
| உளச்சார்பு பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 |

***குறிப்பு.-***

(i) விண்ணப்பதாரி ஒருவர் தனது சேவையில் கடமையாற்றக்கூடிய திறமையும் பரீட்சிப்பதற்கு இந்த வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) சகல எழுத்துமூல விடைத்தாள் சார்பாகவும், தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழைகள் குறித்து புள்ளிகள் குறைக்கப்படும்.

(iii) மேற்படி ஒவ்வொரு பாடத்துக்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். திறமை அடிப்படையிலும் நிலவுகின்ற பதவி வெற்றிட அளவுக்கு ஏற்பவும் பதவி வழங்கப்படும்.

(iv) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- விண்ணப்பதாரர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு மொழி மூலம் மட்டும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

7. பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் வருமானத்தலைப்பு 2003.02.13 இற்கு வரவு வைக்கப்படும் முறையில் தாம் வதியும் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பிரதேச செயலாளரின் அலுவலகத்துக்கு வழங்கி பெற்றுக்கொள்ளும் வ. மா. ச. நி/2 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுகள் தவிர வேறு எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எக்காரணம் கொண்டும், வழங்கிய பரீட்சை கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதை கருத்திற்கொள்ளவும்.

*8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-***

8.1 இந்த அறிவித்தலின் பின்னால் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ப A4 அளவிலான (21cm x 29cm) கடதாசியில் இரண்டு பக்கங்களும் பயன்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகம் பல் கூட்டுத்தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "பயிலுநர் மருந்துக்கலவையாளர் பதவி (பயிற்றுவிக்கும் தரத்துக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2015" என குறிப்பிடப்பட வேண்டும்.)

8.2 தற்போதைக்கு அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை/நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

8.3 தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்குப் பொருத்தமற்ற, குறிக்கப்பட்ட தினத்துக்கு முன்பு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, சரியான தகவல்கள் வழங்கப்படாத, பூரணமற்ற மற்றும் தாமதமாகிக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் எந்தவிதமான அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு பொருத்மானதா என சரிப்பார்க்கும் பொறுப்பு விண்ணப்பதாரிக்கு உரியது. முறைப்படி விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்படாமையின் மூலம் ஏற்படும் அசௌகரியம் விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தின் நிழற் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.06.30 ஆகும்.

*10.* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இல்லாதவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான அனுமதி அட்டையொன்று பெற்றுக்கொள்ளுதல் என்பது இந்தப் பதவியை பெறுவதற்குரிய தகைமை எனக் கருதப்படமாட்டாது. தகைமைகள் உறுதிப்படுத்தப்படுவதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப்படல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குப் பொருத்தமான எல்லா தகைமைகளும் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு அல்லது அத்தினத்துக்கு முன்னதாக பூரணப்படுத்தப்பட்டவையாக இருத்தல் முக்கியமானதாகும்.

*11.* விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் : விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்காகவும் தமது ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்கள் மூலம் பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்த வேண்டும்:-

(1) ஆட்பதிவு செய்யும் திணைக்களம் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** : பரீட்சை நிலையத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சையில் தோற்றுவதற்காக தகைமையற்றவர்கள் என கருதப்படுவர்.

*12.* யாரேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தமது பரீட்சை அனுமதி அட்டை பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்பு கிடைக்காது போனால், அது பற்றி உடனடியாக "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலக பல்கூட்டுத்தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது, பின்வரும் விபரங்கள் வழங்கப்பட வேண்டும்:-

(அ) பரீட்சையின் பெயர்;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர்;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பத்தை அனுப்பிய முகவரி, பதிவுத் தபாலின் இலக்கமும் திகதியும்.

*13.* யாரேனும் விண்ணப்பதாரி ஒருவர், தகைமை அற்றவர் என பதவியேற்பதற்கு முன்னர் ஏதாவதோர் சந்தர்ப்பத்தில், தெரியவந்தால், விண்ணப்பிக்கும் தகுதி செல்லுபடியற்றதாகும். பதவி பெற்றதன் பின்பு அல்லது தெரிந்து கொண்டு பொய்யான தகவல் வழங்கப்பட்டுள்ளமை பற்றி அல்லது வேண்டுமென்றே உண்மையான தகவல்களை வெளிப்படுத்தப்படாமல் இருந்தமை தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

*14.* விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள அறிவித்தலுக்கு ஏற்ப அல்லது இங்கு குறிப்பிடப்படாத வேறு தகவல்கள் சார்பாக, வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முடிவே இறுதியான முடிவாகும்.

*15.* இந்தப் பரீட்சை நடைபெறுதல் அல்லது நடைபெறாமை பற்றிய அல்லது பரீட்சை நடாத்தப்பட்டதன் பின்பு தெரிவு செய்தல்/அல்லது செய்யாமை அல்லது வெற்றிட எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரியது.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்.
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
மாகாண சபை அலுவலகம், பல்கூட்டுத்தொகுதி,
குருநாகல்,
*2015, மே 11.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பயிலுநர் மருத்துவ பதவி (பயிற்றுவிக்கும் தரத்துக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

பரீட்சை எண் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐
(சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடனான பெயர் :------.
(ஆங்கில பெரிய எழுத்தில்)
உதாரணம் :- SILVA, A. B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(பிரவேசப் பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்)
1.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.6 ஆண்/பெண் தன்மை (பெண் -1, ஆண் - 0) : ☐
(சரியான இலக்கத்தை கூட்டில் இடுக.)
1.7 விவாகமானவர்/ஆகாதவர் ☐
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
1.8 தேசிய அடையாள அட்டை இல :----.

2. 2.1 2015.03.31 அன்று வரை வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவு காலம் :----.
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
2.2 தொலைபேசி எண் :- தனியாள் :---- வீடு :----

3. பிறந்த திகதி :
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----
3.1 விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியாகிய 2015.06.30 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----- மாதங்கள் :------ நாட்கள் :------
3.2 இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? :

4. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :----.
4.1 க. பொ. த. (சா. த. ) பரீட்சை

முதல் அமர்வு :
பரீட்சை ஆண்டு :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாம் அமர்வு :
பரீட்சை ஆண்டு :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

4.2 க. பொ. த. (உ.த.) பரீட்சைக்கு தோற்றிய வருடம், புதிய பாடத்திட்டமா/பழைய பாடத்திட்டமா என்பது,

பரீட்சை ஆண்டு :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

5. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
திகதி :----.

பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராமல் ஒட்டவும்

**6. விண்ணப்பதாரியின் உறுதி மொழி.-**

................................. ஆகிய என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் உண்மையானவையும் சரியானவையும் என்பதையும், ...................... இலக்கம் கொண்ட ............................. ஆந் திகதி பணம் செலுத்திய பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளேன் என்பதையும், தெரியப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு இணங்க நடந்து கொள்வதற்கும், இந்தப் பரீட்சை பற்றிய நிபந்தனைகளுக்கு ஏற்ப நான் பொருத்தமற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதன் பின்னரோ எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட எடுக்கப்படும் முடிவுக்கு நான் சம்மதிக்கிறேன், மேலும் பரீட்சை நடைபெறுதல் சம்பந்தமாக வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் வெளியிடப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கின்ற திரு./திருமதி/செல்வி ....................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ......................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை வைத்ததாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
கையொப்பம் :----.
பதவியும் :----.
முத்திரையும் :----.

(இந்த உறுதிமொழி அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/முப்படைகளில் அதிகாரம் பெற்ற அதிகாரி/பொலிஸ் சேவையில் கெஸட் பண்ணிய பதவியுள்ள அதிகாரி ஒருவர் அல்லது ரூபா 240,360 ஐ விட அதிகமான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும், நிரந்தர தொழில் பெற்றுள்ள அரச/வடமேல் மாகாண சேவையில் உள்ள அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**அரசாங்கத்தில் அல்லது மாகாண சபை அரச சேவையில் தற்போது உள்ள விண்ணப்பதாரிகளுக்கு திணைக்கள அதிகாரி மூலம் சிபாரிசு**

(தேவையற்ற சொற்களை வெட்டி விடுக)
திரு./திருமதி/செல்வி ............................ தற்போது .......................... அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .......................

ஆக நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளார் எனவும், அவர் சேவையை திருப்திகரமான முறையில் செய்கிறார் எனவும், அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவரோ, அனுதாபத்தின் பேரில் சேவை செய்ய இயலாமை காரணமாக ஓய்வு பெற்றுள்ளார்/ ஓய்வு பெறவில்லை எனவும், பதவியை விட்டு விலகிய ஒருவர் என கவனத்தில் கொள்ளப்பட்டவர் /கொள்ளப்படாதவர் எனவும் உறுதிப்படுத்துவதுடன், இந்தப் பரீட்சையின் பெறுபேறின்படி, பதவி பெற அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் சிபாரிசு செய்கிறேன்.

-----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை இடுக).

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டினைத் தவிர வேறு எதுவும் இணைக்கப்படக்கூடாது.

5-687

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.